DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.72/2024

PW - 10

| | | |
|---|---|---|
| Name | : | சரவணன் (Lw - 10) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(1** முதல் **5** எதிரிகள் ஆஜர்**BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

முதல் விசாரணை **Date : 05.05.2026**

நான் தற்போது ஈரோடு மாவட்டம், ஈரோடு தாலுக்கா காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

நான் கடந்த 2021ம் வருடம் பேளுக்குறிச்சி காவல் நிலையத்தில் பொறுப்பு காவல் ஆய்வாளராக இருந்தபோது புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைக்கப்பட்ட இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டும் கடந்த 28.06.2021ம் தேதி மாலை 17.30 மணிக்கு சிங்களாந்தபுரத்தில் உள்ள மேற்கு தெருவில் உள்ள லட்சுமி என்பவரின் வீட்டிற்கு முன்பு சென்று சாட்சிகள் ராணி மற்றும் நிவேதா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(**மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்பு சாட்சிகள் லட்சுமி, சாந்தி, சுமதி, விஜயா, செல்வராஜ், நிவேதா மற்றும் ராணி ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு பேளுக்குறிச்சி காவல்நிலையத்தின் பொறுப்பு அலுவலில் இருந்து நான் விடுவிக்கப்பட்டதால் வழக்கின் கோப்புகளை காவல் ஆய்வாளர் திரு.சிவசங்கர்

அவர்களின் பார்வைக்கு வைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 லட்சுமி எனது விசாரணையின் போது அவருக்கும் எதிரி குடும்பத்தாருக்கும் சுமார் 6 மாதத்திற்கு முன்பே அவர்களுக்கான பொதுவான வீட்டின் மூலபத்திரம் சம்மந்தமாக முன்விரோதம் இருந்துவருவதாக கூறினார் என்றால் சரிதான். எனது விசாரணையின்போது அ.சா.1 லட்சுமி அவரை தவிர சம்பவத்தை நேரில் பார்த்ததாக யாரையும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக சொல்லப்படும் கத்தி மற்றும் குச்சியை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

எனது விசாரணையின்போது அ.சா.2 விஜயா சம்பவத்தை நேரில் பார்த்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் குடியிருக்கும் பழனிவேல், ரங்கசாமி, சுமதி மற்றும் ராஜீ ஆகியோரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல சுமதியை விசாரித்தோம். மற்றவர்கள் சம்பவத்தின்போது வேலைக்கு சென்றிருந்ததால் அவர்களை விசாரிக்கவில்லை. எனது விசாரணையின்போது அ.சா.3 செல்வராஜ் அ.சா.1 லட்சுமியை ராசிபுரம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவோ சம்பவத்தை நேரில் பார்த்ததாகவோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

வாதி தரப்பு 1ம் எதிரியை அடித்ததாக 1ம் எதிரி புகார் கொடுத்து அதன் பேரில் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல நான் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தை பார்வை இடவில்லைஎன்றாலும், சாட்சிகளை முறையாக விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கின் ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**